செய்தி வெளியீடு எண்: 021 நாள் : 11.01.2016

# செய்தி வெளியீடு

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110–இன் கீழ் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிவிப்புகளுக்கிணங்க இரண்டு புதிய கட்டடங்கள் கட்ட ரூ.15 கோடி தமிழக அரசினால் ஒதுக்கீடு செய்யப்பெற்றது. தமிழ்ப் பல்கலைக்கழக வளாகத்தில் ‘j’ வடிவிலான கலைப்புலக் கட்டடம் மற்றும் ‘eh’ வடிவிலான சுவடிப்புலக் கட்டடம் ஆகிய பணிகளை மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் திரு. கே.சி. வீரமணி அவர்களும், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அரசுச் செயலாளர் முனைவர் மூ. இராசாராம் அவர்களும் 9.1.2016 அன்று பார்வையிட்டனர். தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் க. பாஸ்கரன் உடனிருந்தார்.

தமிழ்ப் பல்கலைக்கழக நூலகக் கட்டடத்தினை மையமாகக் கொண்டு 278மீ. ஆரத்தில் ‘த’, ‘மி’, ‘ழ்’, ‘நா’, ‘டு’ என்ற வடிவில் கட்டடங்கள் அமைப்பதற்கான பெருந்திட்ட வரைபடத்தினைப் பார்வையிட்டார்கள். ஏற்கனவே கட்டப்பெற்ற ‘மி’, ‘ழ்’, ‘டு’ ஆகிய கட்டடங்களின் வான் நோக்கில் எடுக்கப்பெற்ற செயற்கைக்கோள் படத்தினையும் பார்வையிட்டார்கள்.

ஆய்வின்போது பொதுப்பணித்துறைப் பொறியாளர்கள் உடன் இருந்தனர். பணிகளை நல்ல முறையில் ஏப்ரல் 2016–க்குள் நிறைவு செய்ய வேண்டுமென மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அவர்கள் பொதுப்பணித் துறையினருக்கு அறிவுறுத்தினார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**